மன்றாட்டு ஜெபம்

தலைவர்: விழுந்தவர்களைக் கைதூக்கி, நிற்கின்றவர்களை விழாமல் பலப்படுத்தி, மனம் உடைந்தவர்களைத் தேற்றி, ஆதரவு இழந்தவர்களை ஆதரித்து, பெலவீனத்தில் உள்ள முதியோர்களிடம் உமது பெலன் பூரணமாய் விளங்க வேண்டுமென்று...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: பிள்ளைகளால் கைவிடப் பட்டவர்கள், கைம்பெண்கள், திக்கற்றவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட முதியவர்கள் அனைவரையும் பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென்று...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: சுகவீனமாய் இருப்போர், மரண விளிம்பில் இருப்போர், உற்றாரை இழக்கக் கொடுத்தோர்

மற்றும் பொருளாதார குறைவால் கடன் தொல்லைக்கு உள்ளாக்கப் பட்ட முதியோரைக் காப்பாற்ற வேண்டுமென்று....

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: உம்முடைய மக்களாகிய நாங்கள் உமது வசனத்தைக் கீழ்ப்படிதலோடு கேட்டு, அன்புடன் உட்கொண்டு, ஆவியின் கனிகளை நாங்கள் தருவதை முதியவர்கள் கண்டு களிகூரும்படி உமது கிருபையை எங்களுக்கு அதிகம் அதிகமாய் தந்தருள வேண்டுமென்று...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: தம்முடைய பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகளின் கீழ்ப்படியாமையினாலும் பொல்லாத கிரியைகளினாலும் நொறுக்கப் பட்ட உள்ளமுள்ள முதியோரரின் மனசஞ்சலத்தைப் போக்கி, சமாதானத்தைத் தந்தருள வேண்டுமென்று...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: முதியவர்களுக்கு ஏற்ற நேரத்தில் மருத்துவ உதவிகளையும் பொருளாதாரத் தேவைகளையும் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் நீர் தயவாக சந்திக்க வேண்டுமென்று ...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே.

தலைவர்: எங்கள் நாட்டின் முத்தக் குடிமகனாகிய குடியரசுத் தலைவர், பிரதமர், வயது மிகுந்த முதலமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாள்வோர், நீதியரசர்கள் மற்றும் வயதில் மூத்த பேராயர்கள், ஆயர்கள், திருச்சபைத் தலைவர்கள் மற்றும் விஷ்ராந்தி நிலையத்தில் உள்ள வயதான சகோதரிகளையும் ஆதரித்து, உம்முடைய பரம ஞானத்தால் வழிநடத்தியருள வேண்டுமென்று...

சபை: எங்கள் மறன்றாட்டைக் கேட்டருளும் கர்த்தாவே. ஆமென்.